**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.13** **நாள் : 17.01.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் போகிப் பண்டிகையை முன்னிட்டு, பயன்பாட்டில் இல்லாத 87.32 மெட்ரிக் டன் கழிவுகள் மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 11.01.2025 முதல் 16.01.2025 வரை 34,748 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் போகிப் பண்டிகையை முன்னிட்டு, சுற்றுச்சூழல் மாசுபாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் பொதுமக்களிடம் பயன்பாட்டில் இல்லாத பிளாஸ்டிக், டயர் மற்றும் பழைய துணி உள்ளிட்ட இதரப் பொருட்களை தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்குமாறு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, 11.01.2025 முதல் 13.01.2025 வரை பயன்பாட்டில் இல்லாத பொருட்கள் பெறப்பட்டன.

அதனடிப்படையில் 11.01.2025 முதல் 13.01.2025 வரை 31.79 மெட்ரிக் டன் பழைய துணிகள், 18.80 மெட்ரிக் டன் டயர் மற்றும் டியூப்கள், 24.14 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் பொருட்கள், 12.31 மெட்ரிக் டன் இதரப் பொருட்கள் என மொத்தம் 87.32 மெட்ரிக் டன் பயன்பாட்டில் இல்லாத பொருட்கள் பெறப்பட்டு அகற்றப்பட்டது.

மேலும், பொங்கல் பண்டிகையையொட்டி, தூய்மைப் பணியாளர்கள் மூலம் வீடுகள்தோறும் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் பெறப்பட்டன. அதனடிப்படையில் 11.01.2025 அன்று 5,424 மெட்ரிக் டன், 12.01.2025 அன்று 5,827 மெட்ரிக் டன், 13.01.2025 அன்று 5,958 மெட்ரிக் டன், 14.01.2025 அன்று 6,233 மெட்ரிக் டன், 15.01.2025 அன்று 5,851 மெட்ரிக் டன், 16.01.2025 அன்று 5,455 மெட்ரிக் டன் என 11.01.2025 முதல் 16.01.2025 வரை மொத்தம் 34,748 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் பெறப்பட்டு அகற்றப்பட்டது.

**செய்தி வெளியீடு :இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**